# போருக்குப் பின்னதான சுற்றுலாத்துறையின் வளர்ச்சியில் வட இலங்கையின் வரலாற்று மையங்கள் - ஒரு பார்வை

**மங்களரூபி சிவகுமார்**

வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
mangalarubysivakumar@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**
சுற்றுலாத்துறையானது வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமன்றி வளர்முக நாடுகளிலும் காணப்படுகின்ற பொருளாதார வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றலினைக் கொண்டிருக்கின்ற ஒரு துறையாகக் காணப்படுகின்றது. யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் தற்போதைய சூழல் சுற்றுலாத்துறையின் விருத்திக்கு ஒரு வாய்ப்பினை வழங்கியுள்ளது. அதன்படி, யுத்தத்துக்குப் பின்னர் இலங்கையின் வட பகுதியில்தான் பல முக்கியமான மையங்கள் சுற்றுலாத்துறையில் அனைவரினது கவனயீர்ப்பினையும் பெற்றுள்ளன. வட இலங்கையின் வரலாற்றினையும் இப்பிராந்தியத்தில் பரந்து காணப்படுகின்ற மையங்களையும் இனங்காண்பது இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும். இவ்வாய்வுக்கு வரலாற்று அணுகுமுறை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளினூடாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கையின் வட புலத்தே அமைந்துள்ள யாழ்ப்பாணப் பிரதேசமானது இலங்கையின் பிற பகுதிகளிலிருந்து தனித்துவமான முறையில் இனங்காணக் கூடியவாறான பண்டைய பெருமைகளையும் சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டமைந்துள்ளது. இவ்விடப் பிரதேசம் கடந்த 30 வருட காலமாக கவனிக்ககப்படாத ஒரு பிரதேசமாக அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

**Keywords:** சுற்றுலா மையங்கள், கலை வடிவங்கள், நினைவுச் சின்னங்கள், சமய நம்பிக்கைகள், தொல்லியல் மையங்கள்

## அறிமுகம்

தற்காலத்தில் உலகில் எல்லோராலும் அறிந்து பேசப்படுகின்றதொரு சொல்லான 'சுற்றுலா' என்பது மக்களது தேவைகளிலொன்றாக மாறிவிட்டது. அதிசயமானவை, ஆர்வமூட்டக் கூடியவை, மனதைக் கவர்பவை, இயற்கைக் காட்சிகள் போன்றனவற்றையெல்லாம் காண்பதற்கு மக்கள் விரும்புகின்றனர். தாம் வசிக்கின்ற பகுதிகளிலிருந்து புறப்பட்டுச் சென்று பிற இடங்களைக் காணுகின்ற ஆர்வமே சுற்றுலா என்பது தோன்றுவதற்கான அடிப்படைக் காரணமாகும் *(தர்மராஜா, 2004).* அவ்வகையில் அதிகமாகக் கிடைக்கின்ற ஓய்வு, சம்பளத்துடன் கூடிய விடுப்பு, வாழ்க்கைத்தரம், போக்குவரத்தின் வளர்ச்சி, விரைவான செய்தித் தொடர்பு, மக்களது செலவு செய்கின்ற ஆற்றல் போன்ற காரணிகள் இன்று சுற்றலாவினை ஒரு முக்கியமான தொழிற்துறையாக மாற்றிவிட்டதெனலாம். சுற்றுலாத்துறையானது வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமன்றி வளர்முக நாடுகளிலும் காணப்படுகின்ற பொருளாதார வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றலினைக் கொண்டிருக்கின்றதொரு துறையாக உள்ளது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் கணிசமானதொரு பங்களிப்பினை நல்குகின்ற துறையாக இத்துறை காணப்படுகின்றது. அந்தவகையில் இலங்கையின் வட பகுதியில் காணப்படுகின்ற பிரதேசங்கள் பல சுற்றுலா மையங்களாகளாகக் காணப்படுகின்ற அதேநேரத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகவும் காணப்படுகின்றன. எனவே, இலங்கையின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியில் வட இலங்கையில் காணப்படுகின்ற வரலாற்று மையங்களின் பங்களிப்பானது சமகாலத்தில் முக்கியத்துவம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. யுத்தம் முடிவிற்கு வந்த நிலையில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் இலங்கையின் வட பகுதியினை நோக்கி வருகின்ற சுற்றுலாப்பயணிகளில் அனேகர் வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களையே பெருமளவிற்குப் பார்வையிட்டுச் செல்கின்றனர். இத்தகைய வரலாற்று மையங்களில் வரலாற்று எச்சங்கள், நினைவுச் சின்னங்கள், சமாதிகள், ஆலயங்கள், கலை வடிவங்கள், பண்டைய சமூகத்தின் வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள், சமய நம்பிக்கைகள் போன்றவற்றினை எடுத்துக்காட்டுகின்ற அம்சங்கள் பல அடங்குகின்றன *(சிற்றம்பலம், 1992).* இவற்றில் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை போர்க் காலத்தில் அல்லது போருக்குப் பின்னரான காலத்தில் பல்வேறு காரணங்களின் நிமித்தமாக பர்க்கக்கூடிய சூழல் நிலவவில்லை. இதனால் இவற்றினது முக்கியத்துவமானது சமகாலத்தில் மேலும் அதிகரிக்கின்றது. எனவே குறிப்பாகச் சொல்லப்போனால் இலங்கையின் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியில் அண்மைக் காலங்களில் இலங்கையின் வட பகுதியின் பங்களிப்பானது குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் அமைந்து காணப்படுகின்றதெனலாம்.

இத்தகைய வட இலங்கையில் காணப்படுகின்ற வரலாற்று மையங்கள் சுற்றுலாப் பயனிகளைக் கவருவதால் அவர்களது வருகையானது இப்பகுதிகளை நோக்கி அண்மைக்காலமாக அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகின்றது. இவர்களது வருகையின் மூலமாகப் பிரதேசத்தின் வருவாயானது அதிகரிப்பதுடன் அது இப்பிராந்தியத்தினது அபிவிருத்திக்கும் தூண்டுகோலாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. பலரது தொழில் வாய்ப்புக்களுக்கும் இவை பங்களிப்பினைச் செய்கின்றன.

**நோக்கங்கள்**

இந்த ஆய்வு முயற்சியானது பல்வேறு நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. பொதுவாக நோக்குமிடத்து தென்னிலங்கையின் வரலாற்றினை அறிந்துகொள்ளவதற்கான சாதகமான சூழல்கள் இலங்கையில் கி.மு 6ஆம் நூற்றாண்டிலிருந்தே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவர்களது வரலாற்றுடன் தொடர்பான முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பல அரச ஆதரவுடன் நீண்டகாலமாகப் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன. அத்தகையதொரு நிலையானது இலங்கையின் வட பகுதியில் காணப்படவில்லை. அவர்களது சமகாலத்தைய வட பகுதியின் வரலாறானது வெறும் கர்ணபரம்பரையான கதையாகவே உள்ளது. எனவே கி.பி 13ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டகால இப்பகுதியின் வரலாறு சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது.

இதனால் எமது வரலாற்றினையும் இப்பிரதேசத்தில் பரந்து காணப்படுகின்ற வரலாற்று மையங்களையும் இனங்கண்டு அவற்றின் பெருமைகளைப் பிறர் தெரிந்து கொள்ளவும் யாழ்ப்பாண வரலாற்றினை எதிர் காலத்தில் ஆராய ஆவலாக இருப்பவர்களுக்கு உதவி செய்வதையும் இவ்வாய்வு பிரதான நோக்கங்களாகக் கொண்டுள்ளது. மேலும் ஆவணப்படுத்தல் என்பது வரலாற்றில் முக்கியத்துவமானதொரு பணியாகும். இவை எல்லாவற்றினையும் விடவும் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில குறிப்புக்கள் இவ்விடயமாகக் காணப்படுகின்றதே தவிர முழுமையான ஆய்வாக அத்தகைய குறிப்புக்கள் காணப்படவில்லை. இத்தகைய தேவைகள் யாவற்றினையும் இவ்வாய்வானது தனது நோக்கங்களாகக் கொண்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

**இலக்கிய மீளாய்வு**

பொதுவாக இலங்கையின் சுற்றுலா தொடர்பாகப் பலர் நூல்களை எழுதியிருந்தாலும் தனித்து யாழ்ப்பாணத்தில் உள்ள வரலாற்று மையங்களைச் சுற்றுலாத்துறையுடன் தொடர்புபடுத்தி எவரும் ஆராயவில்லையென்றே கருதலாம். இருப்பினும் வி. குகபாலன் அவர்கள் இவ்விடயமாக ஒரு சில ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார். ப. புஸ்பரட்ணத்தின் Tourism and Monuments என்ற நூலும் ஓரளவிற்கு வட பகுதியில் காணப்படுகின்ற வரலாற்று மையங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவற்றினைவிட சுற்றுலா தொடர்பான வழிகாட்டிகள் வட பகுதியில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சில இடங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன.

**ஆய்வு முறையியல்**

ஆய்வொன்றினது செயற்பாடுகளை முழுமையாகக் குறிப்பிடுவதே ஆய்வு முறையியல் எனப்படுகின்றது. ஆய்வாளன் ஒருவனால் ஒழுங்கமைந்த தரவுகளைத் திரட்டுதல், உற்றுநோக்குதல், வகைப்படுத்தல், வியாக்கியானம் செய்தல் போன்றனவற்றுக்கான விளக்கங்களெல்லாம் இங்குதான் கொடுக்கப்படுகின்றன (*அருந்தவராஜா, 2011).* இலங்கையின் வட பகுதியில் காணப்படுகின்ற வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடங்களை மட்டுமே பற்றிய ஆய்வாக அமைகின்ற இவ்வாய்வானது தற்கால அறிவுத்துறைகளுக்கு ஏற்றவகையில் வரலாற்று அணுகுமுறையின் (Historical approach), அடிப்படையிலும் விளக்கமுறை ஆய்வு (Descriptive methods) அடிப்படையிலும் மேற்கொள்ளப்படுகின்றது. முதற்தர ஆதாரங்களும் இரண்டாந்தரத்திலான ஆதாரங்கள் பலவும் ஆய்வின் தேவையினைக் கருத்தில் கொண்டு பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகள் வரிசையில் நேரடியான அவதானம், நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் என்பன அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் வரிசையில் முதற்தர ஆதாரங்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட சில நூல்கள், கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள், உத்தியோகபூர்வ ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**சுருக்கமும் முடிவும்**

இலங்கையின் வடபாகத்திலமைந்துள்ள யாழ்ப்பாணப் பிரதேசமானது இலங்கையின் பிற பகுதிகளிலிருந்து தனித்துவமான முறையில் இனங்காணக் கூடியளவிற்கு பண்டைய பெருமைகளையும் சிறப்புக்களையும் கொண்டமைந்துள்ள பகுதியாகக் காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் காணப்படுகின்ற வரலாற்று மையங்களும் இத்தகைய பெருமையில் தாமும் பங்கெடுத்துக் கொள்ளுகின்றன. ஒரு பிரதேசத்தின் தொன்மை, அதன் வளர்ச்சி, மேம்பாடு, நாகரிகம், பண்பாடு போன்றவற்றினை எடுத்துக்காட்டுவது வரலாறெனப்படுகின்றது. இன்றும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற வரலாற்றின் எச்சங்களாக உள்ள பல வரலாற்று மையங்கள் தமிழர்களின் பெருமைகளை உலகத்திற்குப் பறைசாற்றி நிற்கின்றன.

இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் பல கடந்த மூன்று சாகாப்தகால யுத்தத்தின் காரணமாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றன. யுத்தம் முடிவடைந்த பின்னரான இக்காலத்திலும் இத்தகைய வரலாற்று மையங்களை நோக்கிச் சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதில் பல சவால்கள் காணப்படுகின்றன. சிறந்த திட்டமிடல் காணப்படாமை, உட்கட்டமைப்பு விஸ்தீரணமின்மை, மக்களது ஒத்துழைப்புக்கள் அதிகளவில் கிடையாமை, தகுந்த வழிகாட்டி வசதிகளின்மை, வரலாற்று மையங்கள் பல இனங்காணப்பட்டு அவற்றினை அபிவிருத்தி செய்வதற்கு முன்வராமை போன்ற காரணிகள் இவற்றில் குறிப்பிடத்தக்கன. இத்தகைய பிரச்சினைகள் அல்லது சவால்களை துணிச்சலுடன் சந்திப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். அப்போதுதான் இலங்கையின் வட பகுதியில் காணப்படுகின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் முக்கியத்துவமானது அதிகரிப்பதுடன் அவற்றினது பெருமையினை உலகம் அறிவதுடன் அதனையொட்டித் தேசத்தின் வருமானமும் அதிகரிக்குமெனலாம். இதனால் பலருக்கு வேலைவாய்ப்புக்களும் கிடைக்கின்றன. அந்தவகையில் இவ்வாய்வானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் கண்டறிந்து அவற்றின் பெருமையினை அதிகரிக்கின்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


அருந்தவராஜா, க.(2011), வரலாற்று வரைவியல், அஞ்சு வெளியீடு: நல்லூர்.

குகபாலன்,கா. (2010), "இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் துறையின் அண்மைக்காலப் போக்குகள்'', *புவியியலாளன்.* யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

குணசிங்கம், மு. (2008), இலங்கையில் தமிழர் - ஒரு முழுமையான வரலாறு. எம்.வி.வெளியீடு: சிட்னி.

சிற்றம்பலம், சி.க, (1992), யாழ்ப்பாண இராச்சியம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்: யாழ்ப்பாணம்.

தர்மராஜ், ஜே. (2004), சுற்றுலா. டென்சி பப்ளிகேசன்ஸ்: சிவகாசி.

Sivasamy, V. (1988), " Some Aspects of the History of the Nallur Kandaswamy Temple", *Some Facets of Hinduism*. Jaffna.

District Secretariat Jaffna; *Jaffna District Statistical Hand Book*, (2011,2012).

Sri Lanka Tourism Development Authority, *Annual Statistical Report*: SLTDA.